# கிறித்தவ நாவல்களில் சமூக மதிப்புகள்

**பெ.வீரபுத்திரன்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை (சுயநிதி)
காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி)
விருதுநகர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

ஒரு சமூகத்தில் கடைபிடிக்கக்கூடிய பண்பாட்டுப் பெறுமானங்கள் யாவும் அச்சமூகத்தின் மதிப்பை வெளிப்படுத்தும் காரணிகளாகும். ஒரு சமூகத்தில் திருட்டு என்பது மோசமான செயல் என்றால், அது நல்ல நடத்தை நெறியைக்கொண்ட சமூகமாகப் பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு சமூகத்திற்கும் உகந்த பண்பாடும், விலக்கப் பண்பாடும் இருக்கின்றன. உகந்த பண்பாடுகள் அனைத்து மனிதர்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அறமதிப்புகளை உடையனவாகும். ஆனாலும் எவற்றை ஒரு சமூகம் விலக்குகிறதோ அவற்றைச் செய்யவே மனிதர்கள் விரும்புகின்றனர். அவர்கள் சமூக அறப் பெறுமதியை இழப்பவர்களாகவும் இருப்பர். “உகந்த நிலைப் பண்பாடு என்பது சமுதாய வாழ்வில் இதை இதைத்தான் செய்ய வேண்டும் என்று மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதைக் குறிக்கும். ஆனால் உண்மைப் பண்பாடானது மக்கள், சமுதாயத்தில் சட்டதிட்டங்களின் எதிர்பார்ப்புகளைக் கவனத்தில்கொள்ளாமல் நடைமுறை வாழ்வில் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதைக் குறிக்கிறது”[1] இது ஒரு சமுதாயத்தில் உகந்த பண்பாடாக ஏற்றுக்கொண்ட அறத்தை நடைமுறையில் கைக்கொள்ளாதிருத்தலைக் குறிக்கிறது. அவ்வாறு இருப்பது தவறென்பதை ஒருவருக்குப் பிறர் உணர்த்த வேண்டும். அப்போதுதான் சமுதாயத்தின் அறங்களைக் கடைபிடித்து ஒழுகுதல் என்பது நடைமுறையிலும் செயற்படக்கூடியதாக அமையும். குறிப்பாக, கிறித்தவ சமுதாயத்தில் சாதி நடைமுறை கடைபிடிக்கக் கூடாதென்பது கொள்கையாகும். ஆனால் பல பகுதிகளில் கிறித்தவர்களிடையே சாதி முறை கடைபிடிக்கப்படுகிறது. “பிரிவினைச் சுவர் தேவாலயத்தில் மட்டுமின்றி வெள்ளாளர்களின் மனதிலும் ஆழமாக அடித்தளமிட்டுக் கட்டப்பட்டிருந்ததால் சாதிய முரண்பாடுகளும் அதனை மூட்டிய மோதல்களும் வடக்கன்குளத்தில் அன்றாட நிகழ்ச்சிகளாயின”[2] என்று வடக்கன்குளத்தில் வெள்ளாளக் கிறித்தவர்கள் கடைபிடித்த சாதிய வேறுபாட்டினை வெளிப்படுத்துகிறார் ஆ.சிவசுப்பிரமணியன். இவ்வாறான மனப்போக்கிலிருந்து விடுபட்டுக் கிறித்தவர்களின் உகந்த நிலைப் பண்பாடான சாதியற்ற நிலைக்கு நகர்தல் வேண்டும்.

சமுதாய மதிப்புகள் என்பவை பண்பாட்டு அடிப்படையில் சமுதாயத்தில் உள்ள மக்களால் பின்பற்றப்படும் அறங்களாகும். இவற்றைக் கடைபிடிப்பதன் வழியாகவே அச்சமூகத்தின் மதிப்பீடு பிறரால் கவனத்திற் கொள்ளப்படும். ஒரு சமூகத்தினர் ஒழுக்கத்திற்கு மாறான பண்புகளைக்கொண்டு செயல்பட்டால் அது அச்சமூகத்தின் மீதான களங்கமாக வெளிப்படும். அவ்வகையில் நாவல்கள் ஒரு பகுதியின் அல்லது கிராமத்தின் மக்களைக் கொண்டவையாக அமைகின்றன. நாவல்கள் சுட்டும் சமுதாயங்களில் மதிப்புகள் கடைபிடிக்கப்படும்விதம் வேறுபாடுகளைக் கொண்டனவாக இருப்பதை உணரமுடிகிறது.

**அறம்**

மனிதர்கள் குழுவாக, கூட்டமாக, குடும்பமாக, சமுதாயமாகப் பரிணமித்த பின் அவர்களுக்குள் ஒழுங்குமுறைகள் ஏற்பட்டன. செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தி அவற்றைத் தொடர்ந்து கடைப்பிடித்து ஒழுகுவதை வழக்கமாகக்கொண்டனர். நன்மை, தீமை என்னும் செயல்பாடுகளை வகுத்து, அவற்றில் நன்மை என்று கருதப்பட்டவற்றை அனுமதித்தனர், தீமை தடை செய்யப்பட்டது. வேளாண் சமூகக் கட்டத்தில் இது மேலும் இறுக்கமடைந்து, அறங்கள் சட்டங்களாக்கப்பட்டன. மனிதர்களின் அற நடத்தைகளே சமூகத்திற்கு மதிப்பை ஏற்படுத்துவனவாயின. மதுக் குடிப்பதை அனுமதிக்காத கிராமங்கள் இன்றும் இருக்கின்றன. அச்சமூக மக்கள் குடியை உகந்த நிலைப் பண்பாடாகக் கொள்ளவில்லை என்று கொள்ளலாம். அதுபோல, பல அற நடத்தைகளைச் சமூகமே மனிதர்களுக்கு விதிக்கிறது. அவற்றைக் கடைபிடித்தொழுகும் மனிதர்கள்தான் அச்சமூகத்தின் மாதிரிகளாக மாறுகின்றனர். நீதிமொழிகள் போன்ற விவிலியத்தின் பகுதிகள் சமுதாய மனிதர்கள் கடைபிடித்தொழுக வேண்டிய அற நடத்தைகளைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. இயேசுவின் உவமைக் கதைகளும் மனிதர்களின் அறியாமையைப் போக்கவும், அறங்களைப் போதிக்கின்றனவுமாக அமைகின்றன. “இப்படித்தான் செய்யவேண்டும், இப்படித்தான் வாழ வேண்டும், இன்னாருடன்தான் சேரவேண்டும், இவ்விவற்றைப் புறந்தள்ள வேண்டும், என்று ஒரு வரையறையைக் கட்டுப்பாட்டைக் கற்பிப்பதே அறம்”[3] என்று அறத்திற்கு விளக்கம் காணப்படுகிறது. இவற்றைச் செய்யவேண்டும், இவற்றைச் செய்யக்கூடாது, இவற்றைப் புறந்தள்ள வேண்டும் என ஒரு சமுதாயத்தில் கடைபிடிக்கப்படுமென்றால் அதை அச்சமூக மனிதர்கள் யாவரும் கடைபிடித்தொழுக வேண்டும்.

**பொய்யாமை**

உண்மை பேச வேண்டும் என்பதை வாழ்வியல் அறமாகக் கொண்டிருக்கும் தமிழர்களின் வாழ்வானது பொய்யர்களைப் பழிக்கும். பொய்கூறுவதைச் சமூகம் தீமையாகக் கருதும். நடந்தவற்றிற்கு மாறான செய்திகளைக் கூறுவதன் மூலம் பிறர்க்குத் தீங்கிழைக்கும்விதமாக நடந்துகொள்வது அறத்திற்கு மாறானதாகும். எனினும், நன்மை ஏற்படுமென்றால் பொய்யுரைக்கலாம் என்று வள்ளுவம் குறிப்பிடுகிறது. பொய்யர்களை இரட்டை நாக்குக் கொண்டவர்கள் என்று விவிலியம் பழிக்கிறது (சீராக்.5:9). “பழிவாங்குதல், போலி மதிப்பு, தன்னலம், கள்ளக்கடத்தல், பணமுடைமை ஆகியவை காரணமாகப் பொய்மை தோன்றுகிறது”[4] என்று சே.தனராசு குறிப்பிடுகிறார். இத்தகைய பொய்யைத் தவிர்த்து பொய்யாமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

புத்தம் வீடு நாவலில், கொலை செய்தவன் தங்கராஜ் என்று கூறப்படுவதை மறுக்காமல் ஆமோதிக்கும் லிஸியின் தந்தையின் செயல் உண்மையை மறைக்கும் ஒன்றாகும். அவருடைய நிலை பொய்யான குற்றச்சாட்டைத் தங்கராஜ் மேல் சுமத்துவதற்கு ஏதுவாகிறது (பு.வீ.153). உண்மையான குற்றவாளி பிடிபடாமலே தங்கராஜும் தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுகிறான் (பு.வீ.174).

செல்லப்பாவின் தந்தை புற்றுநோயால் இறந்துவிடுகிறார். இறப்புச்செய்தியை எமிலியின் தந்தைக்குக் கூறுவதற்கு அண்ணன் செல்லப்பாவிடம் கூற, அவன் அனுப்பிவிட்டதாகச் சொல்கிறான். ஆனால் எமிலியின் தந்தை நிகழ்வு தெரியாது வரவில்லை. எனவே செல்லப்பா தந்தி அனுப்பாமலே அனுப்பியதாகச் சொல்வதாகக் குற்றம் சுமத்துகிறான் (டா.செ.94).

பர்மாவின் யுத்தச் சூழலில் அங்கிருந்து ரயிலில் பயணித்து தமிழகம் வரும் ராணி தன் வீடு தெரியாமல் அல்லாடுகிறாள். அவளது தனிமையைப் பயன்படுத்தி அவளைத் தவறான வழியில் அழைத்துச் செல்ல விரும்பும் ஒரு முதியவன், அவளுக்குத் தானே வீட்டைக் காண்பிப்பதாக அழைத்துச் செல்கிறான். அவன் இன்னொரு கடைக்காரப் பெண்ணிடம் ஒப்படைத்துவிட, அவள் தான் வீட்டைக் காண்பிப்பதாகக் கூறி அழைத்துக்செல்கிறாள். ராணி அவளது தீய எண்ணத்தைக் கண்டுகொண்டு அங்கிருந்து ஓடி விடுகிறாள் (மா.134). பொய்யர்கள் சூழ்ந்திருக்கும் ஊரில் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்பதை இது உணர்த்துகிறது.

தங்கப்பன், ரோஸம்மா தன்னைத் தேடிவந்த நிலையிலும், தன்னை வளர்த்த தங்கராஜ் மாமாவுக்குத் துரோகம் எண்ணாது அவளை வீட்டில் கொண்டு விடுகிறான். அவள் தன்னுடைய சினேகிதியைப் பார்த்துவிட்டு வருகிறாள் என்று பொய் சொல்கிறான் (அ.22). இது நன்மை பயத்தற்பொருட்டுக் கூறிய பொய், எனவே பொய்மை ஏற்புடையதாகிறது.

தன் படிப்பிற்காகத் தன் தாய் அடகு வைத்த தாலியைத் திருப்பித் தருவதாகக் கூறிய துரை, அவன் வேலைக்குச் சென்று திருமணம் செய்த பின்னும் தான் சொன்னது போலச் செய்யவில்லை (கீ.108). எனவே, அது பொய்கூறியது போலாகிறது.

கிறித்தவ சமயத்தில் உள்ளவர்கள் முந்தைய காலம் போல் இல்லை என்றும், பொய்யும் தீயநோக்கும் கிறித்தவர்களிடம் அதிகரித்துவிட்டது என்றும் தன் மகளுக்குச் சொல்கிறார் செல்வமணி, "இன்னிக்குக் கிறிஸ்தவன்னி சொல்லவனியன்ல ஒருத்தன்கூட உண்மையான கிறிஸ்தவன் கெடையாது" (க.53) என்கிறார்.

மேரியை ரெஜி தன் இச்சைக்குப் பயன்படுத்தியபின் அவள் கர்ப்பம் அடைகிறாள். ஆனால் அதை மறைத்து, கறிக்கடைக்காரன் ஜார்ஜிக்கு அவளைத் திருமணம் செய்துவைக்கின்ற (த.த.41) டெய்சியம்மாளின் செயல் ஆபத்திற்குப் பாவம் இல்லை என்னும் அடிப்படையிலானது. ஆனாலும் அவள் ஒரு பொய்யை மறைக்க, மேலும் பல பொய்கள் சொல்கிறாள். குறைமாதத்தில் குழந்தை பிறக்கும் என்று கூறி, தன் மகனால் ஏற்பட்ட கர்ப்ப காலத்தை அவன் கண்டுபிடித்துவிடக் கூடும் என்று ஜார்ஜிடம் சொல்கிறாள் (த.த.83). அவனும் அதை நம்புகிறான். இவ்வாறு பொய்மை வாழ்வில் தவிர்க்கவியலாத தீமையாக உள்ளதை நாவல்கள் கூறுகின்றன.

பாதர் ராஜா அடிமைப்பட்ட மக்களுக்குத் தன்னால் இயன்றதைச் செய்யவும், கருப்பனிடம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவும் முடிவு செய்கிறார். அதற்காக ராமநாதபுரத்திற்கு அடுத்துள்ள அத்திக்குடிக்குச் செல்ல விரும்புகிறார். ஆனால் அவ்வூரில் தனது நோக்கத்தை நேரடியாக வெளிப்படுத்தாமல் தான் நாட்டுப்புறப் பாடல்கள் சேகரிக்க வந்ததாகச் சொல்கிறார் (வ.ஒ.55). அவர் சொன்னது பொய் என்றாலும், நன்மைக்காகவே என்பதால், அது உண்மையென்றே கொள்ளப்பட வேண்டும். ஆனால் ரெட்டியார்கள் காலனி வீடு கட்டித் தருவதாக அவர்களை வாழும் இடத்தைவிட்டுக் காலி செய்வதற்காகக் கூறும் பொய்களைத் தலித் மக்களுக்குத் தெளிவுறுத்தி அவர்களுக்குப் புரிய வைக்கிறார் (வ.ஒ.60). ரெட்டியார்களின் பொய் வஞ்சகமானதாகும்.

தன் தந்தை சவரி இறப்பதற்கு முன்னால் தன்னிடம் கூறிய கதை மகள் ஜெயமேரிக்கு அவர்மேல் கோபத்தை ஏற்படுத்துகிறது. தான் மேரி என்ற பெண்ணைக் காதலித்ததுபற்றியும், அவளைத் திருமணம் செய்யமுடியாமல் போனதுபற்றியும், அதனால் அவள் தனக்காகத் திருமணம் செய்யாமல் போனது பற்றியும் கூறுகிறார். மனைவி இறந்த பின்னும் தான் அவள் நினைவாகவே இருந்ததாகக் கூறும் சவரி, அதன் காரணமாகவே தன் மகளுக்கு மேரி என்ற பெயர் வைத்ததாகவும் கூறுகிறான். இறந்த தன் தந்தை சவரியை நினைத்து ஜெயமேரி, இதுவரை பொய்யான வாழ்க்கை வாழ்ந்து, என்னையும் ஏமாற்றி விட்டாயே என்று கூறி அழுகிறாள் (சு.71-72). சவரி தன் மகளிடம் மறைத்த செய்திகள் என்றாலும், அது பொய்யான வாழ்வேயாகும்.

சூசை வேலையாட்களுக்குக் கூலி உயர்வு கேட்டான் என்று அவரைக் காவலர்கள் உதவியுடன் நெல் மூட்டையைத் திருடியதாக அழைத்துச் சென்று அடித்துச் சித்தரவதை செய்தும், மகளான முத்தம்மாளை மானபங்கம் செய்தும் துன்புறுத்துகின்றனர். சூசையைக் கொன்று கிணற்றில் போட்டுவிட்டு, மகள் முத்தம்மாள் தவறான உறவு வைத்தது தெரிந்து தற்கொலை செய்துகொண்டதாக ஊரில் பொய்ச்செய்தியைப் பரப்பிவிடுகின்றனர். முத்தம்மாளையும் வேசி என்று பட்டம் சூட்டி, தலையை மொட்டை அடித்து ஊருக்கு வெளியில் தங்கிக் கொள்ளச் செய்கின்றனர் (க.ர.27-28). ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவரும் உயர் சாதியினரும் செய்த இச்செயல் பொய்யும் புனைவுமாகச் செய்திகளைத் திரித்துத் தலித் மக்களை துன்புறுத்துவதாக இருக்கிறது.

பாதர் ராஜாவின் ஆலோசனையின்படி, பிச்சூரில் உள்ள திருச்சபையில் சாதிய வேறுபாடும், தீண்டாமையும், ஒடுக்குமுறையும் இருப்பதை முறையிட்டு தலித் மக்கள் மனுப் போடுகிறார்கள். இது தெரிந்த ரெட்டியார்கள் அவர்களது கோரிக்கைகளை ஆயரிடம் அனுப்புவதற்கு முன்பாக அவர்களைத் தடுக்க வேண்டும் என்று நினைக்கின்றனர். அதற்காக அவர்களுக்குச் சலுகைகள் தருவதாக ஒப்புக்கொள்கின்றனர். அதை உண்மை என நம்பும் கித்தேரியான் முதலியோருக்குப் பாதர் ராஜா அவர்களின் பொய் வேடத்தை வெளிப்படுத்துகிறார் (யா.120). அவர்கள் இவ்வாறு மனு போடவிடாமல் செய்வதற்காகவே கோரிக்கைகளை ஏற்றதாகச் சொல்கிறார்கள். அவர்கள் அவ்வளவு எளிதில் மாறி விடுபவர்கள் இல்லை என்பதைப் புரிய வைக்கிறார்.

மரியான் தனது வாலிப வயதில் டிரம் வாசித்துப் பழகியிருந்தார். அவரோடு வேறு சிலரும் அடித்துப் பழகியிருந்தனர். புதிதாகச் சாமியார் மாற்றலாகி வந்தபோது அவரைப் பார்ப்பதற்காக டிரம் வாசித்துக்கொண்டே சென்று, ஊர் எல்லையில் அடிப்பதை நிறுத்திவிட்டுச் சாமியாரைச் சந்தித்துவிட்டுத் திரும்பினர். திரும்பும்போது விளையாட்டாக மரியான் டிரம்மை அடிக்க, பிறரும் உணர்ச்சி வேகத்தில் அடித்துவிடுகின்றனர். அது பரவர் தெரு என்பதால் அவர்களது செயலைத் தங்களுக்கு ஏற்பட்ட அவமதிப்பாகக் கருதினர். இவர்களாக அடித்திருக்க முடியாது சாமியார்தான் அடிக்கச் சொல்லியிருக்க வேண்டும் என நினைத்துச் சாமியாரிடம் கேட்க, அவரும் தான் அடிக்கச் சொன்னதாகப் பொய் சொல்கிறார். அந்த வகையிலாவது தலித்துகளுடனான பகை தீரட்டும் என்றே அப்பொய்யைக் கூறினார் (எ.49).

இதுபோல மறியல் நாவலில், மறியலில் கலந்து கொள்ளாதவர்களை எல்லாம் கலந்து கொண்டதாகக் காவலர்கள் அவர்கள்மீது பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவுசெய்து துன்புறுத்துகின்றனர். மேலும் தலித்துக்கள் நாயக்கர்கள் செய்த அநியாயங்களுக்காகக் கொடுத்த எந்த வழக்கையும் பதிவு செய்ததில்லை. தலித்துகள்மேல் மட்டும் மறியலில் கலந்து கொள்ளாதவர்கள் மேலெல்லாம் பொய் வழக்குப் பதிவு செய்திருக்கின்றனர் (ம.166). என்று பொய் கூறுவதும், பொய்யாக நடந்துகொள்வதும், பொய்யர்கள் வாழ்வதுமான சூழல்கள் நாவல்களில் காட்டப்படுகின்றன.

பொய்யால் நன்மையும் தீமையும் விளைவதைக் காணமுடிகிறது. சில நேரங்களில் தலித்துக்களின் நன்மைக்காகப் பொய்கள் பயன்படுகின்றன. சில நேரங்களில் தலித்துக்களை ஒடுக்குவதற்குப் பொய்கள் பயன்படுகின்றன என்பதை மாற்குவின் நாவல்கள் வழி அறியமுடிகிறது.

**கள்ளுண்ணாமை**

மனிதர்களின் தீய பழக்கங்களில் மது அருந்துவதும் ஒன்றாகும். பழங்காலத்தில் கள் அருந்துவது வாழ்க்கை நடைமுறையாக இருந்திருக்கக்கூடும். ஒரு சில இனத்தினர் கள் அருந்துவதை ஏற்கவும், வேறு சில இனத்தினர் எதிர்க்கவும் செய்கின்றனர். ஆனால் தற்காலத்தில் பலரும் மது அருந்துபவர்களாக, அதற்கு அடிமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இத்தகைய மது அருந்துவது தீமை பயக்கக்கூடியது என்பதைச் சமூக நடைமுறைகளிலிருந்து உணரமுடிகிறது. மது ஒழுங்கீனத்தையும் போதையையும் மதிகேட்டையும் தரும் என நீதிமொழிகளில் கூறப்படுகிறது (நீதிமொழிகள்.20:1). “இந்நாட்டில் தமிழ்ச் சமுதாயத்தின் இழிநிலைக்கும் பொருளாதாரச் சீர்குலைவிற்கும் காரணமாக அமைகின்றவற்றுள் மதுப்பழக்கமும் ஒன்று”5 என்கிறார் வே.சபாபதி. மதுப் பழக்கம் மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய ஒன்றாகக் காணப்படுகிறது. தனிமனிதனையும் சமூகத்தையும் பாதிக்கும் காரணியாக மதுப் பழக்கம் காணப்படுகிறது.

புத்தம் வீடு நாவலில், குடிபோதையில்தான் தன் தம்பியைக் கொலை செய்திருக்கிறார் லிஸியின் அப்பா. லிஸியின் அம்மாவிடம் காவலர்கள், “தம்பியைக் கொன்றுவிட்டு ஓடிவிட்டாரா?” என்று கேட்க “ஐயையோ அவரு இப்ப வீட்டிலேயே வாறதில்லியே கள்ளுக் கடையிலோ, காப்பிக் கடையிலோ கெடப்பாரு” (பு.வீ.146) என்கிறாள். காழ்ப்புணர்ச்சியில் அக்கொலையை லிஸியின் அப்பாதான் செய்திருக்கிறார். அதனால் தன் கை அழுக்காக இருப்பதாகவும், குடிகாரனின் ஆசீர்வாதம் வேண்டாம் என்றும் சாகும் தருவாயில் மகளிடம் கூறுகிறார் (பு.வீ.163). ஹெப்சிபா ஜேசுதாசின் பிற நாவல்களில் குடி பற்றிய செய்திகள் காணப்படவில்லை.

செல்லப்பாவை அடித்துவிட்ட செய்தியைக் கூற, தம்பியிடம் அவனது சித்தப்பாவை வரச்சொல்கிறாள் அம்மா. அவன், சின்னையா குடிகாரரு அடிப்பாரு என்கிறான் (கீ.4). திக்குரிச்சி, தேவசகாயம், பறியன் சுந்தரம் ஆகியோர் குடித்துக் கொண்டிருந்தனர். அவர்களது நோக்கம் செல்வமணியின் மகள்களை அடைவதாக இருந்தது. போதை அவர்களது அறிவை இழக்கச்செய்தது (க.139-141). ஜார்ஜ் கறிக்கடை நடத்துகிறவன். அவன் குடித்துவிட்டால் மேரிக்குட்டியைத் தேடி வீட்டிற்குவந்து அவளுடன் சண்டையிழுப்பதை வேலையாகக் கொண்டவன் (த.த.18). இவற்றின்மூலம் மது அருந்துபவர்கள் தங்களின் சுயநினைவை இழப்பதையும், தவறான செயல்களில் ஈடுபடுவதையும், அதனால் சமூகக் கேடு விளைவதையும் காணமுடிகிறது.

மது அருந்துவதற்காகவே தவறிழைக்கும் அடியாட்களைத் தயார் செய்கிறார் அம்பலம். அருளாயியைக் கடத்திவந்து வன்புணர்வு செய்ய வேண்டும் என்று மறுப்பவர்களை மதுப்புட்டி வெறியராக்குகிறது (வ.ஓ.113). மது தரும் போதையே தவறுக்கு வித்திடுகிறது. அருளாயியையும் (வ.ஓ.115) பின்பு அவர்களை அழைத்து வந்த அம்பலத்தின் மனைவியையும் (வ.ஓ.127) வன்புணர்வு செய்கின்றனர். இத்தகையவர்களைக் கள்ளில் விஷம் வைத்துக் கொலையும் செய்துவிடுகிறான் அம்பலம் (வ.ஓ.147). மதுவால் அழிவும், சமூகத் தீமையும் ஏற்படும் என்பதை இந்நிகழ்வுகள் சுட்டுகின்றன. மரியானின் குடிப்பழக்கம் அவ்வூரார்களால் பழிக்கப்படுகிறது (எ.43). மது குடித்தல் சமூகத் தீமையாக நாவல்களில் காணப்படுகிறது. சில நாவல்களில் மது குடித்தல் போன்ற செயல்கள் இல்லை. இது பாத்திரங்களின் நற்குணப்பான்மையை வெளிப்படுத்துவதாக அமைகிறது.
நாவல்களில் புறம் பேசுதல், பிறரைப் பற்றி குற்றம் கூறுதல், பிறர் மீது வசை பாடுதல், தனக்கு ஏற்புடையதைச் சொல்வதற்காகப் பிறரைப் பற்றிக் கூறுதல் என்பனவாக காணப்படுகின்றன.

**குறிப்புகள்**

1. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.166
2. ஆ.சிவசுப்பிரமணியன், கிறித்தவமும் சாதியும், ப.60
3. பெ.மாதையன், செவ்வியல் இலக்கியங்கள் காலமும் கருத்தும், ப.187
4. சே.தனராசு, தமிழ் இதழ்களில் மதிப்புகள், ப.109
5. செ.ஜீன்லாறன்ஸ், கு.பகவதி (ப.ஆ), தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் தொல்லியல் வரலாறு சமூகவியல், ப.158